[பேரவைத் தலைவர்]

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண்16, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

16—

ஊர்களின் பெயர்களை மாற்றுதல்

*** 702. திரு. மு. க. ஸ்டாலின்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

ஜாதிப் பெயர்களில் உள்ள பல ஊர்களின் பெயர்களை மாற்றும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் பெருமாள் முதலித் தெரு, நைனியப்ப நாயக்கர் தெரு, மாதவ நாயர் தெரு, சிங்கண்ணச் செட்டித் தெரு, கிருஷ்ணமாச்சாரியார் தெரு போன்ற பல்வேறு தெருக்களின் பெயர்களிலுள்ள நாயக்கர், நாயர், செட்டி, ஆச்சாரியார் போன்ற ஜாதியைக் குறிக்கும் வார்த்தைகள் நீக்கப்பட்டதைப் போல ஊர்களின் பெயர்களில் ஜாதிகளைக் குறிப்பிடக்கூடிய சொற்களை நீக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதுபற்றி ஆராயும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1996 ஜூலை 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊர்களின் பெயர்களிலுள்ள ஜாதிப் பெயரை நீக்குவதைப் போல, ஜில்லாக்களின் பெயர்களிலும் ஜாதிப் பெயர்கள் உள்ளன. அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த தேவேந்திர குல வேளாளர், பள்ளர், குரும்பர் இனத்தைச் சேர்ந்தவர்கள் இமானுவேல் பெயர் வைக்கவில்லை சுந்தரலிங்கக்குடும்பன் பெயரை வைக்கவில்லை என்று போராட்டம் நடத்தக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, திண்டுக்கல் மாவட்டம், மதுரை மாவட்டம் என பழையபடி, முன்பு வழங்கியதைப்போல, மாற்றி அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுசெய்து தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல மாவட்டப் பெயர்களை மாற்றினால் பெருந்தலைவர் காமராஜர் பெயர் வைக்கப்பட்டுள்ளதையும் மாற்ற வேண்டிவரும். அம்மையார் மாற்றுங்கள் என்று சொல்கிறார். பெருந்தலைவர்களுடைய பெயரை வைத்துவிட்டு, மாற்றினால் நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர்களுடைய பெயர்களை வைக்க வேண்டியதுதான். ஆனால் தலைவருடைய பெயருக்குப் பின்னால் உள்ள ஜாதிப் பெயரை நீக்குவதற்கு அரசு முயற்சி செய்யுமா? பொது மக்களுடைய பிரதிநிதிகள் ஜாதி மாநாடுகளில் கலந்து கொள்வதற்கு தடை விதிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களுடைய தலைவர் அல்லது தலைவி முதலமைச்சராக இங்கே பொறுப்பேற்றிருந்தபோதுதான், தீரன் சின்னமலை என்ற கம்பீரமான பெயரை தீரன் சின்னமலை கவுண்டர் மாவட்டம் என்று மாற்றினார்கள் என்பதை நண்பர் தாமரைக்கனி அவர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

[1996 ஜூலை 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், வைத்திருக்கின்ற பெயரை எடுப்பது சரியாக இருக்காது என்கிற ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். ஆனால், பெயரை முழுமையாக எடுத்து விட வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. எங்களுடைய ஒட்டுமொத்தமான கருத்து என்னவென்றால், கவுண்டர் என்று இருப்பது, படையாட்சியார் என்று இருப்பது, தேவர் என்று இருப்பது, இப்படிச் சிலவற்றை வேறுவிதமாக மாற்றுங்கள் என்றுதான் சொல்கிறோம். அதாவது, ஜாதிகளினுடைய பெயரால் கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்ற காரணத்தினாலே, அதையெல்லாம் தவிர்க்கவேண்டும் என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஜாதியிலே பூ இருக்கலாம், ஜாதிப்பூ, காயிலே ஜாதி இருக்கலாம் அது ஜாதிக்காய். மனித சமுதாயத்திற்கு இருக்கின்ற ஜாதிகளை நாம் பெரிதுபடுத்தி, மாவட்டங்களுக்குப் பெயர் வைக்கின்ற காரணத்தினாலே, இன்று பல கலவரங்கள் உருவாகின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை மட்டும் தவிர்த்து, தலைவர்களுடைய பெயரால் மாவட்டம் வைக்கலாம், ஆனால் ஜாதியினுடைய பெயரை இணைக்காமல் வைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அக்காளுக்காகத் தம்பி வக்காலத்து வாங்கினாலும், அக்காள் சொன்னது என்ன என்று தெரியாமலேயே வக்காலத்து வாங்கிவிட்டார். அம்மையார் அவர்கள் சொன்னது, பெயர் மாத்திரம் இருந்தால் போதும். திண்டுக்கல் மாவட்டம் என்றும், சேலம் மாவட்டம் என்றும், ஈரோடு மாவட்டம் என்றும் பெயர் மாத்திரம் இருந்தால் போதும், தலைவர்களுடைய பெயரைச் சேர்க்க வேண்டாம் என்றுதான் சொன்னார்கள். இல்லையா? (குறுக்கீடு) ஆமாம் என்றும் ஒப்புதல் அளிக்கின்றார்கள். அதற்குத்தான் நான் பதில் அளித்தேன். பெருந்தலைவர்களுடைய பெயரை வைத்துவிட்டு மாற்றக்கூடாது என்று பதில் அளித்தேன். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். சில பெரிய தலைவர்களுடைய பெயர்களோடு பிரிக்க முடியாத அளவிற்கு ஜாதிப்பெயர் ஒட்டிக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக ஜி.டி.என். என்றால் யாருக்கும்

1996 ஜூலை 25]

தெரியாது. ஜி.டி.நாயுடு என்று சொன்னால்தான் தெரியும். அதைப்போல, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாத்திரம் அல்ல, சுயமரியாதை இயக்கத்தினுடைய சுடராக விளங்கியவர் ஏ.எஸ்.கே. ஐயங்கார், அவரை ஏ.எஸ்.கே. ஐயங்கார் என்று சொல்வதால், அவர் ஜாதிக்குள்ளே புகுந்து கொண்டிருந்தார் என்று பொருள் அல்ல. அதைப்போல, தேவர் என்று சொன்னால், அது ஒரேயொரு தேவரைத்தான் குறிப்பிடும். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைத்தான் குறிப்பிடும். அதைப் பிரித்துவிட்டு பசும்பொன் முத்துராமலிங்கம் என்று சொன்னால் சரியாக இருக்காது. எனவே, பழகிவிட்ட பெயர்களைப் பிரிக்க முடியாது. குறிப்பாக, இராமசாமி படையாட்சியார் மாவட்டம் என்று குறிப்பிட்டார்கள். எஸ்.எஸ். இராமசாமி மாவட்டம் என்று அழைத்தால் சிறிது காலத்தில் எஸ்.எஸ்.ஆர். மாவட்டம் என்றாகி, அது எஸ்.எஸ். இராமசாமி மாவட்டமா, எஸ்.எஸ். இராஜேந்திரன் மாவட்டமா என்கின்ற குழப்பம் ஏற்பட்டுவிடும். எனவே சில பெயர்களோடு தவிர்க்க முடியாத அளவிற்கு ஜாதிகள் இணைந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு.அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

17—

சைவ வேளாளர் இனத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

***6— திரு. அ. லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் அதிகமாக வாழும் சைவ வேளாளர் இனத்தை (பிள்ளைமார்) பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

LEGISLATURE LIBRARY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS